# January 10, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கடந்த ஜன. 6-ஆம் தேதி தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட 'உங்க கனவ சொல்லுங்க திட்டத்தை திருவள்ளூர் மாவட்டம், பாடியநல்லூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

(i) உங்க கனவ சொல்லுங்க' திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள 1.91 கோடி குடும்பங்களை நேரில் சந்தித்து கனவுகளைக் கேட்டறியும் வகையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் 50,000 பேர் தன்னார்வலர்களாக தேர்வு செய்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பொதுமக்களைச் சந்தித்து அவர்கள் தெரிவிக்கும் தகவல்களை கைப்பேசி செயலியில் பதிவேற்றம் செய்வர். பின்னர், பொதுமக்களுக்கு தனித்துவமான அடையாள எண்ணுடன் கனவு அட்டையும் வழங்கப்பட உள்ளது.

2. 'மத்திய அரசின் பரிந்துரையின்பேரில், பட்ஜெட் கூட்டத் தொடருக்காக நாடாளுமன்றத்தைக் கூட்ட குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கியுள்ளார். அதன்படி, ஜன. 28 முதல் ஏப். 2 வரை பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது. முதல் கட்ட அமர்வு பிப். 13 வரையும், இரண்டாம் கட்ட அமர்வு மார்ச் 9 முதல் ஏப். 2 வரையும் நடைபெறும்' என்று தெரிவித்துள்ளார்.

(i) அதேநேரம், பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் தேதி குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. கடந்த 2017-ஆம் ஆண்டில் இருந்து பிப்.1-ஆம் தேதி பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. நடப்பாண்டு பிப்.1-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையாகும்.

(ii) ஆண்டின் முதல் கூட்டத் தொடர் என்பதால், இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரையுடன் தொடங்கும்.

(iii) மத்திய பட்ஜெட்டை தொடர்ந்து 9-ஆவது முறையாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்யவுள்ளார்.

3. கிரீன்லாந்துக்குள் அமெரிக்க வீரர்கள் நுழைந்தால், தளபதிகளின் உத்தரவுக்காக காத்திராமல் தங்கள் நாட்டு வீரர்கள் உடனடியாக துப்பாக்கிச்சூடு நடத்துவார்கள்; பிறகுதான் இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று டென்மார்க் எச்சரித்துள்ளது. இது குறித்து அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) 1952-ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, டென்மார்க் பிரதேசத்தில் வெளிநாட்டுப் படைகள் தாக்குதல் நடத்தினால், தளபதிகளின் உத்தரவுக்காகக் காத்திருக்காமல் படையினர் உடனடியாகத் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டும்.

(ii) நாஜி படையினர் கடந்த 1940-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் டென்மார்க்கைத் தாக்கினர். அப்போது தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு களத்தில் இருந்த வீரர்கள் தளபதிகளுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. அந்த நிலைமை மீண்டும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அது இன்று வரை அமலில் உள்ளது.

(iii) கிரீன்லாந்தில் உள்ள டென்மார்க் ராணுவ அமைப்பான ஆர்கடிக் கூட்டு

கட்டளையகம்தான் எந்தவொரு நடவடிக்கையும் தங்கள் மீதான தாக்குதலா இல்லையா என்பதை முடிவு செய்யும். அது தாக்குதல்தான் என்று முடிவு செய்தால் திருப்பித் தாக்குவது குறித்து அந்தக் கட்டளையகமே முடிவெடுக்கும். ராணுவ தலைமைக் கட்டளையகத் திடம் அது அனுமதி கேட்காது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) டென்மார்க்குக்கு சொந்தமான, உலகின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்து, தன்னாட்சிப் பிரதேசமாக செயல்பட்டு வருகிறது. டென்மார்க்கில் தொடர்ந்து அங்கம் வகிப்பதா, அல்லது சுதந்திரம் பெறுவதா என்பது குறித்து கிரீன்லாந்தில் விவாதங்கள் நடைபெற்றுவருகின்றன. அந்தத் தீவில் யுரேனியம், இரும்பு, தங்கம், அரிய தாதுக்கள், ஏராளமான கனிம வளங்கள் மிக அதிகமாக உள்ளன. மேலும் இந்தத் தீவின் அமைவிடம் ராணுவ முக்கியத்துவம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

4. இந்தியாவின் முதலாவது 5150 டிரையத்லான ஞாயிற்றுக்கிழமை (ஜன. 11) சென்னையில் நடைபெறவுள்ளது.

(i) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (எஸ்டிஏடி) லகப்புகழ் பெற்ற அயன்மேன்' குழுமம் சார்பில் பந்தயத்தை நடத்தும் ஆசியாவின் 3-அவது நாடாகவும் உலகின் 6-அவது நாடாகவும் இந்தியா பெருமை பெறுகிறது.

(ii) 5150 டிரையத்லான்- ஒரு சவாலான இலக்கு: சர்வதேச அளவில் பிரபலமான ஒலிம்பிக் தூரத்தை (51.50 கி.மீ) அடிப்படையாகக் கொண்டு இப்போட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் 1.5 கி.மீ கடல் நீச்சல், 40 கி.மீ சைக்கிள் பயணம். 10 கி.மீ ஓட்டம் ஆகியவை அடங்கும். கடினமான'அயன்மேன் 70.3 மற்றும் முழு தூர அயன்மேன் போட்டிகளில் பங்கேற்க விரும்பும் வீரர்களுக்கு இப்போட்டி சிறந்த அனுபவமாக விளங்கும்.

5. ஜெர்மனி பிரதமர் ஃப்ரீட்ரிக் மெர்ஸ், இந்தியாவுக்கு இருநாள் அரசுமுறைப் பயணமாக ஜன.12-இல் வரவுள்ளார்.

(i) குஜராத் மாநிலம், காந்திநகரில் பிரதமர் நரேந்திர மோடியுடன் அவர் இருதரப்புப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக, பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) ஜெர்மனி பிரதமர் ஃப்ரீட்ரிக்கின் முதல் இந்திய அரசுமுறைப் பயணம் இதுவாகும்.

(iii) இந்தப் பயணத்தின்போது, குஜராத் மாநிலம், அகமதாபாதில் உள்ள சபர்மதி ஆசிரமத்தை பிரதமர் மோடியும், பிரதமர் ஃப்ரீட்ரிக்கும் பார்வையிட உள்ளனர். பின்னர், சபர்மதி நதிக் கரையில் நடைபெறவுள்ள சர்வதேச காற்றாடி திருவிழாவில் இருவரும் பங்கேற்க உள்ளனர். இதைத் தொடர்ந்து, காந்தி நகரில் உள்ள மகாத்மா காந்தி கருத்தரங்கு மையத்தில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

(iv) இந்தியா-ஜெர்மனி இடையே வியூக ரீதியிலான கூட்டாண்மை எட்டப்பட்டு 25 ஆண்டுகள் அண்மையில் நிறைவடைந்த நிலையில், இருதரப்பு உறவுகளின் முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் ஆலோசிக்க உள்ளனர்.

6. அமெரிக்காவின் 500 சதவீத வரி மசோதா தொடர்பான நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்து வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(i) ரஷிய கச்சா எண்ணெய்யை இந்தியா, சீனா, பிரேஸில் உள்ளிட்ட நாடுகள் தொடர்ந்து இறக்குமதி செய்து வருகின்றன. இந்த எண்ணெய் விற்பனை மூலம், உக்ரைனுக்கு எதிரான போரில் ஈடுபட ரஷியாவுக்கு நிதி கிடைப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது.

(ii) இந்த நிதி ரஷியாவுக்குக் கிடைப்பதைத் தடுக்கும் நோக்கில், ரஷிய கச்சா எண்ணெய்யை கொள்முதல் செய்யும் நாடுகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்கள் மீது குறைந்தபட்சம் 500 சதவீத வரி விதிக்கும் மசோதா அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iii) இந்த மசோதாவுக்கு அந்நாட்டு அதிபர் டிரம்ப் ஒப்புதல் அளித்துள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் மசோதா நிறைவேறினால் அது இந்தியாவுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

(iv) இது தொடர்பாக புது தில்லியில் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அமெரிக்காவின் 500 சதவீத வரி மசோதா சார்ந்த நடவடிக்கைகளை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருகிறது. கச்சா எண்ணெய் கொள்முதல் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து ஏற்கெனவே தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(v) சர்வதேச சந்தையில் ஏற்படும் சூழல்கள், நாட்டின் 140 கோடி மக்களின் எரிசக்தி பாதுகாப்புத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பல்வேறு இடங்களில் இருந்து மலிவான விலையில் எரிசக்தியை பெற வேண்டிய அவசியம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு இந் தியா செயல்பட்டு வருகிறது.

(vi) ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கு...: பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கில் 5,180 சதுர கி.மீ. நிலத்தை 1963-ஆம் ஆண்டு சீனாவுக்குப் பாகிஸ்தான் விட்டுக்கொடுத்தது. அங்கு தற்போது சீனா உள்கட்டமைப்புத் திட்டங்களை மேற்கொண்டு வந்தாலும், ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கு இந்தியாவுக்குச் சொந்தமானது. அந்தப் பள்ளத்தாக்கு தொடர்பாக சீனா-பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட எல்லை ஒப்பந்தத்தை இந்தியா அங்கீகரிக்கவில்லை.

7. தமிழக அரசு சார்பில் கடந்த 2021 முதல் 2025-ஆம் ஆண்டு வரை தமிழகம் முழுவதும் புதிதாக 100 காப்பு வனப்பகுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து வனத்துறை சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

(i) தமிழகத்தின் புவியியல் பரப்பளவில் 33 சதவீதத்தை வனப்பகுதியாக மாற்ற வேண்டும் என இலக்கோடு தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் எதிரொலியாக தற்போது தமிழகத்தில் 24.47 சதவீத நிளப்பரப்பு வனப்பகுதிகளாக மாற்றியுள்ளது.

(ii) வனஉயிரின வாழ்விடங்கள், நீர் நிலைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதுடன், சுற்றுசூழல் வழித்தடங்களை உறுதிப்படுத்தும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட வனப்பகுதிகள் காப்பு வனங்களாக அறிவிக்கப்பட்டு வருகிறது.

(iii) அந்தவகையில், கடந்த 2021 முதல் 2025-ஆம் ஆண்டு வரை 4 ஆண்டுகளில் தமிழகம் முதல் 100 புதிய காப்பு வனப்பகுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், தமிழகத்தில் உள்ள பாதுகாக்கப்பட்ட வனங்களின் பரப்பளவு சுமார் 135 சதுர கிலோமீட்டர் அளவுக்கு விரிவடைந்துள்ளது.

(iv) இதில், திண்டுக்கல், தருமபுரி, மதுரை, கள்ளக்குறிச்சி, தேனி, சிவகங்கை, நாமக்கல், நீலகிரி, சேலம் மற்றும் தென்காசி ஆகிய 10 மாவட்டங்களில் 13,494.95 ஹெக்டேர் பரப்பளவில் புதிதாக அறிவிக்கப்பட்ட இக்காப்பு வனங்கள் பரவியுள்ளன. புதிதாக அறிவிக்கப்பட்ட தேனி மாவட்டத்தில் உள்ள ஹைவேவிஸ் 2,836.33 ஹெக்டேர் பரப்பளவுடன் கூடிய மிகப்பெரிய வன வட்டாரம் என்பது குறிப்பிடத்தக்கது.

8. இந்தியா ஏற்றுமதி செய்யும் நாடுகளில் சீனா முக்கிய இடத்தைப் பிடித்து வருவது மத்திய வர்த்தக அமைச்சக தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

(i) அந்தத் தரவுகளின்படி, இந்தியாவில் இருந்து சீனாவுக்கான ஏற்றுமதி கடந்த 2022-23-ஆம் நிதியாண்டு ஏப்ரல்-நவம்பர் காலகட்டத்தில் 10.28 பில்லியன் டாலராக இருந்தது. இது 2024-25-ஆம் நிதியாண்டில் 9.2 பில்லியன் டாலராக சரிந்த நிலையில், இது நிகழாண்டு ஏப்ரல்-நவம்பர் காலகட்டத்தில் 33 சதவீதம் அதிகரித்து 12.22 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் சீனாவுக்கு இந்த அளவு ஏற்றுமதி அதிகரித்துள்ளது இதுவே முதல்முறை.

(ii) எண்ணெய் உணவுகள், கடல்சார் பொருள்கள், தொலைத்தொடர்பு கருவிகள், மசாலா பொருள்களின் ஏற்றுமதியே இந்த அதிகரிப்புக்குக் காரணம். இந்தியா-சீனா இருதரப்பு வர்த்தக உறவில் ஏற்பட்டுள்ள கட்டமைப்பு மாற்றத்தை இந்தத் தரவுகள் எடுத்துரைக்கின்றன.

9. அண்மைக் காலங்களில் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் வரதட்சிணை தொடர்பான குற்றங்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. தேசிய குற்ற ஆவணக் காப்பகத் தகவலின்படி 2023-ஆம் ஆண்டில் நாடு முழுவதும் வரதட்சிணைக் கேட்டு பெண்களைத் துன்புறுத்தியது தொடர்பாக சுமார் 15,489 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்ட 27,154 நபர்களில் 4,838 பேர் பெண்கள் ஆவர். பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வரதட்சிணைக் குற்றங்களில் பெண்களுக்கும் பங்கிருப்பது வேதனையளிக்கிறது.

(i) வரதட்சிணைக் கொடுமைகளால் பெண்கள் பாதிக்கப்படுவது தென்னிந்திய மாநிலங்களைக் காட்டிலும் வட இந்திய மாநிலங்களில் அதிகம். இதை உறுதிப்படுத்தும் வகையில், 2023-ஆம் ஆண்டு நாடெங்கிலும் நிகழ்ந்த வரதட்சிணைக் கொடுமை தொடர்பான 6,100 மரணங்களில், உத்தர பிரதேசத்தில் அதிகபட்சமாக 2,122 மரணங்களும், பிகாரில் 1,143 மரணங்களும் நிகழ்ந்துள்ளன.

(ii) நம் நாட்டில் மணவிலக்கு கோரி பதிவாகும் வழக்குகளில், பெருவாரியான வழக்குகள் வரதட்சிணைக் கேட்டு துன்புறுத்துவது தொடர்பானவையாகவே உள்ளது குறிப்பிடத்தக்கது.

(iii) வரதட்சிணை தடுப்புச் சட்டம் 1961, பிரிவு 3-இன்படி வரதட்சிணை கேட்பதும், கொடுப்பதும் குற்றம் என்பதுடன் குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையோ, ரூ.15,000 அல்லது

வரதட்சிணை தொகை இவற்றில் எது அதிகமோ அந்தத் தொகை அபராதமாக விதிக்கப்பட வாய்ப்புள்ளது. எனினும், நடைமுறையில் பெரும்பாலான திருமண பந்தங்கள் வரதட்சிணை தருவதன் அடிப்படையிலேயே அமைகின்றன.

P.L. RAJ IAS & IPS ACADEMY
MAKING YOU SERVE THE NATION